1995 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. டி. எம் செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். உள்ளாட்சித் தேர்தல் சம்பந்தமாக பல்வேறு நடவடிக்கைகளை தற்போது அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையிலேயும் அதற்கு முன்பாக ஆளுநர் அவர்களுடைய உரையிலேயும் தமிழக அரசு ஜுன் மாதத்தில் உள்ளாட்சித் தேர்தலை நடத்த இருக்கின்ற எண்ணத்தை தெளிவுபடுத்தி இருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்த அரசு ஆணைக்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தால் அந்தத் தேர்தல் நடத்துகிற ஒரு நிலைமை மாறக்கூடிய சூழ்நிலை உருவாகும். ஆகவே தற்போது இந்தக் கருத்துரு பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 499, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

499—

கள்ளிக்காட்டு மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குதல்

*22088—**செல்வி கோ. மல்லிகா:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி பேரூராட்சி, கள்ளிக்காட்டு காலனி மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிலம் கையக நடவடிக்கைகள் முற்றுப் பெற்றதும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாதியற்றவர்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாய் தாழ்த்தப்பட்டவர்கள் தாகத்தைத் தீர்க்க வந்த தன்னிகரில்லா தலைவியாய் ஆதிதிராவிட மக்களின் உள்ளங்களில் குடிகொண்டு இருக்கும் அன்புத் தாயாக விளங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஆதிதிராவிட மக்கள் வீட்டுமனைப்பட்டா பெற்று புதுவாழ்வு பெற்றுவரும் சூழ்நிலையில் என் தொகுதியிலுள்ள கள்ளிக்காட்டு காலனி மக்களுக்கும் விரைவில் வீட்டுமனைப்பட்டா வழங்கிட தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்தி மேற்கொள்ள அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் வட்டம், மேல் புவனகிரி கிராமத்தில் உள்ள கள்ளிக்காட்டுக் குடியிருப்பு ஆதிதிராவிட மக்களுக்கு மனைப்பட்டா விரைந்து வழங்குவதற்காக முன்மொழிதல் தயாரித்து அனுப்பவேண்டுமென்ற கோரிக்கையை விரைந்து அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அந்த வகையிலே விரைந்து பணிகள் முடிக்கப்படும். இப்படி விரைந்து பணிகள் முடிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலேதான் 1994 -95 ஆம் ஆண்டு ஆதி திராவிட மக்களுக்காக வழங்கப்பட்ட மனைப்பட்டாக்கள் 1,88,971 வழங்கப்பட்டிருக்கினறன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தும் பணி துவங்கப்பட்டுவிட்டதா? அதில் ஏதேனும் தடங்கல் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தும் பணி துவங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 500, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்.

500—

மொடக்குறிச்சி தொகுதியில் தொழிற்கூடம் தொடங்குதல்

*34176—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —